**கனம் திரு. கோ. பூவராகன்** : கட்டப்பட்ட பாகுகள் எல்லாம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. விநியோகிக்கப்படாமல் ஒன்றும் இல்லை.

*Chinnangudi-Akkur Mukkuttu Road*

*137 *Q.*—Sri K. R. SAMBANDAM: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any representation has been made by the Chinnangudi fishermen in Mayuram taluk about the metalling of Chinnangudi to Akkur-Mukkuttu road connecting many villages viz., Kalamanallur, Kidangal and so on; and

(*b*) if so, the action taken thereon?

**கனம் திரு. கோ. பூவராகன்** : (அ) ஆம்.

(இ) ஆக்கூர் முக்கூட்டிலிருந்து கிடங்கல், கலமநல்லூர், வழியாகச் சின்னக் குடிக்குச் செல்லும் சுமார் 4 மைல் நீளமுள்ள சாலையை அமைப்பதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலை இப்போது நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

**திரு. கி. இரா. சம்பந்தம்** : அந்த ரோடுகளுக்கிடையே இருக்கின்ற வடிகால்களுக்குப் பாலம் கட்டபட வேண்டியிருக்கிறது. அதையும் இதோடு தொடர்ந்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன்** : ரோடு வேலையோடு சேர்ந்தது தான்.

உப்பனுற்றின் மீது பாலம்

* 138 கேள்வி.—**திரு. நா. இராசாங்கம்** : கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென் ஆர்க்காடு மாவட்டம், கூடலூர் தாலுகா கடலோரப் பகுதியிலுள்ள உப்பனுற்றின் மீது பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பமாகும்?

**கனம் திரு. கோ. பூவராகன்** : (அ) & (இ) இவ்வேலை தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. இராசாங்கம்** : கனம் சபாநாயகர் அவர்களே, உப்பனுற்றில் பாலம் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன. இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலை போட்டியின் காரணமாக நிறுத்தப்பட்டிருக்கிறதா, அல்லது சர்க்காருடைய ஏற்பாட்டினுல் நிறுத்தப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. கோ. பூவராகன்** : போட்டியின் காரணமாக எந்த வேலையும் நிறுத்தப்படவில்லை. மத்திய சர்க்காரிடத்தில் மொத்த ரோடு வேலைக்காக ரூ. 25 லட்சம் கேட்டிருந்தோம். அதற்கு